


கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்ட மன்றத் தொகுதி மங்களூர் கிழக்கு ஒன்றியம் தொழுதூர் ஊராட்சியில் ”உங்களுடன் ஸ்டாலின் முகாமை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன் துவக்கி வைத்து பொது மக்களுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் அரசு உயர் அதிகாரிகள் மற்றும் மங்களூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பட்டூர் வீர. அமிர்தலிங்கம் உள்ளார்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக்கோட்டையில் உள்ள பல்வேறு வரலாற்றுச் சின்னங்களை அமைச்சர் இரா.ராஜேந்திரன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி., மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான், செந்தமிழ்ச் செல்வன், செஞ்சி விஜயகுமார், வல்லம் அமுதா ரவிக்குமார், மொக்தியார் அலிமஸ்தான் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### திராவிடர் கழகம் சார்பில் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்குப் பாராட்டு விழா!

# முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் முனுஆதி நூற்றாண்டு விழா!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையுரையாற்றுகிறார்!

சென்னை, அக். 26-

திராவிடர் கழகம் சார்பில் தமிழ்நாடு சட்டப் பேரவை முன்னாள் தலைவர் முனு ஆதி அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் ஆவணக் கொலைகள் தடுப்புக்கான சட்டம் இயற்ற ஆணையம் அமைத்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு விழா நாளை (27.10.2025-திங்கட்கிழமை), மாலை 5.00 மணி இராஜகோபால் திருமண மண்டபம், துரைசாமி ரெட்டி தெரு, மேற்கு தாம்பரத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு ப.முத்தையன் வரவேற்புரையாற்றுகிறார்.

மக்கள்தாசன், வி.ஆர். சிவராமன், தா.கிருஷ்ணா, கோ.நாத்திகன், பொறியாளர் ப.சாமுவேல் எபிநேசர், துரை.மணிவண்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமையேற்று சிறப்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சி.மகேந்திரன், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மீ.அ.வைத்தியலிங்கம், எம்.யாக்கூப், க.வசந்தகுமாரி, கோ.காமராஜ், வீ.பன்னீர்செல்வம் ஆகியோர் நினைவுரையாற்றுகிறார்.

இதில் அனைத்துக் கட்சித் தலைவர்கள், பிரமுகர்கள் கலந்துகொள்கிறார்கள்.

ஆதிமாறன் நன்றி கூறுகிறார்.

# திருவாரூர் மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்கள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் ஆய்வு!

திருவாரூர், அக். 26 -

திருவாரூர் மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை வேளாண்மை, உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ , தாட்கோ தலைவர் என். இளையராஜா, வை.செல்வராஜ் எம்.பி., கே.மாரிமுத்து எம்.எல்.ஏ.,மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன், நகர செயலாளர் வாரை. பிரகாஷ், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை இயக்குனர் பா.முருகேஷ், ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர் வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது...

இன்றைய தினம், வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை பார்வையிடப்பட்டது. சில வயல் பகுதிகள் மழைநீரால் சூழப்ப ட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை கண்டறியும் வகையில் கணக்கெடுக்கும் பணியினை விரைவுப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நெல் உற்பத்தியை பொறுத்த வரையில் கடந்தாண்டை விட மூன்று மடங்கு அதிகமாக உள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மேட்டூர் அணை குறிப்பிட்ட நேரத்தில் திறந்து வைக்கப்பட்டதாலும்;, தமிழ்நாடு முழுவதும் 276 கோடி குறுவை தொகுப்பு வழங்கப்பட்டுள்ளதாலும், நான்கு ஆண்டு காலத்தில் கூடுதலாக 1 லட்சத்து 84 ஆயிரம் இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாலும் விவசாயம் பெரும் வளர்ச்சியடைந்து அதிகளவில் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், விவசாயத்தில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது.

வானிலை நிலவரத்தை கருத்தில் கொண்டு, இந்த அரசு பொறுப்பேற்றவுடன் வழக்கமாக அக்டோபர் மாதத்தில் மேற்கொள்ளப்படும் நெல கொள்முதல் 2022ம் ஆண்டு முதல் செப்டம்பர் மாதத்திலேயே மேற்கொள்ளப்படுகிறது. மேலும், கடந்த 3 ஆண்டுகளில் செப்டம்பர் மாதம் துவங்கிய கொள்முதலில் இதுவரை நடப்பாண்டில் அதிகளவாக 9.67 லட்சம் மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தமிழகம் முழுவதும் இதுவரை 808 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கூடுதலாக திறக்கப்பட்டு மொத்தமாக 1819 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருவதுடன், நாள்தோறும் கொள்முதல் நேரம் மாலை 6 மணி வரை இருந்த நிலையில் இரவு 8 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழக அரசு ரூ.1959 கோடி ஊக்கத் தொகையாக விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. நெல் கூடுதலாக விளைந்த காரணத்தினால், கொள்முதல் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு நெல் முறையாக பாதுகாக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சி மற்றும் டி வாய்க்கால் தூர்வாரும் பணி 8 ஆயிரத்து 371 கி.மீ., அளவிற்கு தூர்வாரப்பட்டு ள்ளது. மேலும், 2 ஆயிரத்து 355 கி.மீ மட்டுமே தூர்வாரப்படவுள்ளது.

தற்போது தனியார் நிறுவனங்கள் நெல் கொள்முதல் செய்வதில்லை. அரசாங்கமே நேரடியாக நெல்லினை கொள்முதல் செய்துவருகிறது. முதலமைச்சர் அவர்கள் நாள் ஒன்றுக்கு கொள்முதல் 800 மூட்டையி லிருந்து 1000 மூட்டையாக உயர்த்தி உத்தரவு பிறப்பித்துள்ளார். அதோடு விவசாயிகளின் கோரிக்கையினையேற்று ஒரு ஏக்கருக்கு 60 மூட்டையிலிருந்து 70 மூட்டையாக உயர்த்தி அரசாணை வெளியிடப் பட்டிருக்கிறது என வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

அமைச்சரின் இந்த ஆய்வின்போது அரசு அதிகாரிகள், விவசாய சங்க பிரதிநிதிகள், பொதுமக்கள் உடன் பங்கேற்றனர்.

தொடர்ந்து திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ரயில் நிலையத்தில் இரயில் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட நெல் வெளிமாவட்டங்களுக்கு அரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டுவருவதையும், வலங்கைமான் வட்டம், நார்த்தங்குடி நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன் செய்தியாளர் களுடன் நேரில் சென்று பார்வையிட்டார்கள்.

அப்போது "திருவாரூர் மாவட்டத்தில், குறுவை அறுவடை 80 சதவீதம் முடிந்து விட்டது. ஏறக்குறைய 1 லட்சத்து 96 ஆயிரம் மெ.டன் நெல் கொள்முதல்செய்யப்பட்டுள்ளது. கொள்முதல் செய்யப்பட்ட நெல் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கும் பணி நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் 10,000 மெ.டன் நெல் ஐந்து இரயில் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் மன்னார்குடி பகுதியில், நீடாமங்கலம், மன்னார்குடி, திருத்துறைப் பூண்டி ஆகிய 3 இரயில் பகுதியிலிருந்து 6 ஆயிரம் மெ.டன் நெல் அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது.

மேலும், 154 லாரிகளில் ஏறத்தாழ 100 லாரி வந்துள்ளது. 50 லாரி வந்துகொண்டுள்ளது. நாளையும் நான்கு ரயில் மூலம் அனுப்ப அனுமதி பெறப்பட்டு, இதன்மூலம் 8000 மெ.டன் நெல் அனுப்பபடும். மேலும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் முறையாக பாதுகாக்கப்பட்டு, போர்கால அடிப்படையில் நாள் ஒன்றுக்கு 8000 முதல் 10000 மெ.டன் வரை இயக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சியரின் இந்த ஆய்வில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் சரவணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மீ.செல்வகுமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.



நாகர்கோவில் மாநகராட்சி, 29 வது வார்டு செட்டி தெருவில் கனமழையினால் தண்ணீர் தேங்கி இருக்கும் நிலையில் மாநகராட்சி சார்பில் மோட்டார் மூலம் மழைநீரை வெளியேற்றும் பணியினை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் பார்வையிட்டு தண்ணீரை விரைந்து வெளியேற்றிட தேவையான நடவடிக்கை எடுக்க அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். உடன் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் ரகுராமன், உதவி பொறியாளர் பழனியம்மாள், மண்டல தலைவர் கு.அகஸ்டினா கோகிலவாணி, மாமன்ற உறுப்பினர் மீனா தேவ், மாநகராட்சி பணியாளர்கள் அனந்த பத்மநாபன், சிவகுமார், தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் சதாசிவன் உட்பட மாநகராட்சி அதிகாரிகள் இருந்தனர்.

### நாளை (27ஆம் தேதி) காளையார் கோவிலில்

# மாமன்னர்கள் மருதுபாண்டியர் 224 வது ஆண்டு குருபூஜை!

## அரசியல் கட்சியினர் - சமூக அமைப்பினர் பங்கேற்பு!

சிவகங்கை, அக்.26-

சிவகங்கையை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவராகள் மாமன்னர் மருது பாண்டியர்கள். இவர்கள் நாட்டின் சுதந்திர த்திற்காக போராடிய பொழுது ஆங்கிலேயர்களால் 224 ஆண்டுகளுக்குமுன்பாக அக்டோபர் 24ஆம் தேதி திருப்பத்தூரில் தூக்கிலிடப்பட்டார்கள். மருது சகோதரர்கள் கடைசி ஆசை வேண்டுகோளின் படி ஆங்கிலேயரிடம் தங்களால் கட்டப்பட்ட காளையார் கோவில் சொர்ணகாளீஸ்வரர் ஆலய ராஜகோபரத்தின் முன்பாக தங்களது தலைகளை புதைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அவர்களது கோரிக்கையை ஏற்று காளையார் கோவிலில் ராஜகோபுரத்திற்கு முன்பாக மருது சகோதரர்கள் தலைகள் புதைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. அத்தகைய வீரம் செறிந்த மாமன்னர் மருது பாண்டியர்கள் தியாகத்தினையும் புகழினை போற்றும் வகையில் ஆண்டுதோறும் அவர்களது நினைவிடத்தில் குரு பூஜை அனுசரிக்கப்படுகிறது.

நாளை 27ம்தேதி இந்த ஆண்டு 224வது குருபூஜையினை முன்னிட்டு பல்வேறு அரசியல் கட்சியினர், சமூக அமைப்பைச் சேர்ந்தவர்கள் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்துவார்கள். பல்வேறு சமூக அமைப்புகள் சார்பில் அன்னதானம் நடைபெறும். முன்னதாக மகளிர் அணியினர் ஊர்வலமாக பால்குடம் மற்றும் முளைப்பாரி எடுத்து வருவார்கள். மருதுபாண்டியர் குருபூஜை யினை முன்னிட்டு பல்வேறு வழியில் பஸ் போக்குவரத்து மாற்றப்பட்டுள்ளது.

மாவட்ட எஸ்.பி.சிவ பிரசாத் தலைமையில் 3000க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடு படுத்தப்பட்டுள்ளார்கள். ஆங்காங்கே மாவட்டம் முழுவதும் ரோந்து பணியில் போலீசார் ஈடுபட்டுள்ளார்கள். பத்துக்கும் மேற்பட்ட சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு வாகனங்கள் பரிசோதனைக்குபிறகு அனுமதிக்கப்படும். இருசக்கர வாகனங்களில் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. நாளை சிவகங்கை ,இளையான்குடி, திருப்புவனம், மானாமதுரை, காளையார் கோவில், திருப்பத்தூர் ஆகிய ஊ,ர்களில் உள்ள பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. இதே போல் 26 ,27 மற்றும் 30ஆம் தேதிகளில் மாவட்டம் முழுவதும் உள்ள மதுபான கடைகளை மூடுமாறு மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி உத்தரவிட்டுள்ளார்.

### கடலூர் மேற்கு மாவட்டத்தில் – தமிழ்நாடு தலை குனியாது

# “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பயிற்சிக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை!



கடலூர், அக். 26-

தமிழ்நாடு தலைக்குனியாது என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி தொடர்பாக கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு: கழகத் தலைவர், முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின் படி "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" என்ற முன்னெடுப்புக்காக " பயிற்சிக் கூட்டம்" கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் வரும் 28.10.2025 செவ்வாய்க்கிழமை, காலை 9.00 மணி அளவில் மாமல்லபுரம், ஈ.சி.ஆர்.சாலையில் உள்ள "கான்ஃப்ளுயன்ஸ் ஹால்" (Confluence Hall)ல் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கடலூர் மேற்கு மாவட்டம் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பி னர்கள், தொகுதி பார்வையாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் - அமைச்சர் சி.வி. கணேசன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### தலைமை பொதுக்குழு உறுப்பினர் – மறைந்த

# மேடவாக்கம் ப.ரவி இறுதி ஊர்வலம்!

## அமைச்சர் மா. சுப்பிரமணியன் தலைமையில் - கழகத்தினர் பெருமளவில் பங்கேற்பு!



சென்னை, அக்.26-

சென்னை தெற்கு மாவட்டம் தலைமை பொதுக்குழு உறுப்பினர் தாமஸ் மலை ஒன்றிய கழக முன்னாள் செயலாளர் மேடவாக்கம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ஒன்றிய கவுன்சிலர் மேடவாக்கம் ப. ரவி அவர்கள் அக்டோபர் 22ஆம் தேதி உடல் நலக் குறைவால் மரணம் அடைந்தார். இந்தச் செய்தி அறிந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முதலமைச்சர் அவர்கள் மேடவாக்கத்தில் உள்ள அவரது வீட்டிற்கு நேரடியாக சென்று மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி மனைவி மற்றும் மகன் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.எஸ்.லோகேஷ் வரா. குடும்பத்தி னருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

இந்த இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் கழகப் பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன். கழகப் பொருளாளர் பாராளுமன்ற உறுப்பினர் டி. ஆர். பாலு கழக முதன்மைச் செயலாளர் கே. என். நேரு. விவசாயத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம். சிறு குறு தொழில் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன் தென் சென்னை பாராளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்க பாண்டியன் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். அரவிந்த் ரமேஷ். காரம்பாக்கம் கணபதி. ஏ.வி.எம். பிரபாகராஜா. எஸ். ஆர். ராஜா. இ. கருணாநிதி. எஸ். சுதர்சனம். தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி. சென்னை துணை மேயர் மு. மகேஷ் குமார். புனித தோமையர் மலை ஒன்றிய சேர்மன் சங்கீதா பாரதி ராஜன். சென்னை மாநகராட்சி சேர்மன்கள். எஸ். வி. ரவிச்சந்திரன்.இ. மதியழகன்.இரா. துரைராஜ். கிருஷ்ணமூர்த்தி.

தாம்பரம் மாநகராட்சி சேர்மன்கள். காமராஜ். வே. கருணாநிதி. சென்னை தெற்கு மாவட்ட துணை செயலாளர் பாலவாக்கம் மனோகரன். பாலவாக்கம் த.விஸ்வநாதன். பொருளாளர் பாஸ்கரன். எம். கே. ஏழுமலை. ஆ. ஹரி கிருஷ்ணன். ஜெ. இ.பாண்டியன். ஒன்றிய கழக செயலாளர் ஜி வெங்கடேசன். ஜி. கே. ரவி தாம்பரம் பகுதிக்காக செயலாளர் த. ஜெயக்குமார்.பம்மல் கருணாநிதி. ஒன்றிய துணை சேர்மன் பி. பிரசாத்

அன்னாரது இறுதி ஊர்வலம் 23ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது இதில் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன். முன்னாள் அமைச்சர் பொன்முடி.

மேலும் ஒன்றிய கழக நிர்வாகிகள் சித்தாலப்பாக்கம் எஸ்.ரவி.எஸ்.கோபு து.த. எச்.டி. போஸ்.கு. வேணுகோபால். சமாதான நல்ல முத்து. டில்லி பாபு. ஆர். சொக்கலிங்கம். ஜி. எம். எஸ். ஏழுமலை. கே. குமார். ஓ. கே. எஸ். சதீஷ். டி. எஸ். பாரதிராஜன். கே. சாமிநாதன். விஷால் சந்திரசேகர். ஊராட்சி மன்ற தலைவர்கள் வேங்கைவாசல் ஜெயச்சந்திரன். ஜல்லடியன் பேட்டை த.அமித்.கோ. முருகவேல். நன்மங்கலம் கிரி. திருசூலம் மாரிமுத்து. திருவஞ்சேரி ஜனனி சுரேஷ். மதுரபாக்கம் மு. வேல்முருகன். எஸ் கோபு. கே. வி. கார்த்திகேயன். சந்தோஷபுரம் அன்பு. முடிச்சூர் விநாயகமூர்த்தி. ஒன்றிய கவுன்சிலர்கள் கல்பனா சுரேஷ். மோகனப்பிரியா சரவணன்.கேசவன் ரவி. பன்னீர்செல்வம். அமுதா வேல்முருகன். ஜாய்ஸ் செல்வராஜ்.சி. சரவணன். மற்றும் உள்ளாட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் கிளைக் கழக செயலாளர் கழக உடன்பிறப்புகள். மற்ற சமுதாய அமைப்பினர். வியாபாரி சங்கங்கள். பொது நிறுவன சங்கங்கள் ஊழியர்கள். மேடவாக்கம் ஊராட்சி மன்ற ஊழியர்கள். உறவினர்கள் உட்பட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

நிறைவாக குடும்பத்தின் சார்பாக இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ. காமராஜ் நன்றி கூறினார்.



திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை மண்டலவாடியில் நடந்த “நலம்காக்கும் ஸ்டாலின்” சிறப்பு மருத்துவ முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் க.சிவசௌந்தர வள்ளி தலைமையில் மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. முகாமை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்ச்சியில் கல்வியாளர் ஜி.பொன்னுசாமி, ஜோலார்பேட்டை ஒன்றியக்குழு தலைவர் சத்யாசதீஷ்குமார், மாவட்ட கவுன்சிலர் சிந்துஜா, ஊராட்சி மன்ற தலைவர்கள் மகேஷ், நந்தினிஅருள் மற்றும் அரசு துறை அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.